5. அறிவிப்பு.

1980–81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை—வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1980–81 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், பேரவையின் 205-வது விதிக்கிணங்க 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 24 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3–00 மணிக்குள் அவற்றைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

6. வரவு-செலவுத் திட்டம் 1981–82—விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981–82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு இந்த மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் நாவலர், இந்த மன்றத்தினுடைய ஒப்புதலுக்காக இங்கே வைத்து இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் கவனமாகப் படித்துப் பார்த்தேன். இதில் ஏதாவது முக்கியமான அம்சங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், எந்த அம்சமும் இல்லை. ஆனால் ஒரே ஒரு அம்சம் மட்டும் இருக்கின்றது. நம்முடைய தன்னிகரற்ற நாவலர் அவர்கள் இரண்டு திருக்குறள்களுக்கு நல்ல முறையிலே அர்த்தம் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மக்கள் பிரச்சினைகளுக்கு இதிலே தீர்வு சொல்லப்பட்டிருக்கிறதா. தொழிலாளர்கள், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்கள் எல்லாம் நம்பிக்கை ஒளி பிறக்கும் என்ற உணர்வோடு இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது அவர்களுடைய பிரச்சினைக்கு எந்தவித பரிகாரமும் இல்லை. எனவே, நம்முடைய நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கக் கூடிய இந்த வரவு செலவுத் திட்டம் எப்படி இருக்கிறது என்றால், அது தாகம் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக இல்லை'; மாறாக கண் சிமிட்டும் கானல் நீராக இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நாவலர் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். என்று நான் நம்புகிறேன். இதை நான் அக்கவுன்டன்ட் பட்ஜெட்